# ...நீங்கள் தபஞ் செய்யாவிட்டால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் ! (லூக். 13:3)

சேசு கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

தபசுக் காலத்தின் மத்தியில் நாம் இருக்கிறோம். மந்திரித்த சாம்பலை நமது நெற்றியில் பூசப்பட்ட நாள் தொடங்கி திருச்சபை தபசை வலியுறுத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தி வருகிறது. தபசு என்பது ஆத்துமத்திலும் சரீரத்திலும் என இரண்டு வகைகளில் செய்யப்பட வேண்டும் ! எதற்காக இரண்டு வகைகளிலும் தபசு செய்யப்பட வேண்டும்? மனிதர்களாகிய நமக்கு ஆத்துமத்தையும் சரீரத்தையும் சர்வேசுரன் கொடுத்திருக்கிறார். இந்த நல்ல தேவனை நாம் நம்முடைய ஆத்துமத்தினாலும், சரீரத்தாலும் நோகச் செய்திருக்கிறோம். சரியாகச் சொன்னால், நாம் ஆத்துமத்தினால் பாவம் செய்திருக்கிறோம். இந்தப் பாவங்களுக்கு நமது சரீரம் அநேக தடவை உறுதுணையாக இருந்து, அதனால் வரும் இன்பங்களை அனுபவித்திருக்கிறது. ஆகவேதான் நாம் ஆத்துமத்தினாலும், சரீரத்தாலும் தவம் செய்ய கடன் உண்டு !

சர்வேசுரனுக்கு எதிராகச் செய்யப்பட்ட துரோகங்களுக்காக, அவைகளை நினைத்து வருந்தி மனஸ்தாபப்படுவதே ஆத்துமத்தினால் நாம் செய்யும் தபசாகும். ஆனால், இந்த மனஸ்தாபமானது மெய்யானதாக இருக்க வேண்டும். ஒரு திருடன் தான் பிடிபட்டுக் கொண்டதை நினைத்து மனம் வருந்தினால், அது மனஸ்தாபம் அல்ல; மாறாக தான் செய்த காரியம் பிறருக்கு நஷ்டம் வருவித்து விட்டதே என்று வருந்துவது, எல்லாவற்றிற்கும் மேலாக, தான் செய்த காரியத்தால் சர்வேசுரனுடைய கட்டளையை மீறியதாகிவிட்டதே! அந்த நல்ல தந்தையை மனம் நோகச் செய்துவிட்டேனே! என்று உணர்ந்து, மனம் வருந்தி, இப்படிப்பட்ட காரியத்தை தான் திரும்பவும் செய்வதில்லை என்று கெட்டியான பிரதிக்கினை செய்வதுதான் மெய்யான மனஸ்தாபம்.

நமது சரீரம் தகாத இன்பங்களை தேடி அனுபவித்தால் அதிலும் நாம் தபசு செய்யவேண்டியது. இச்சரீரத் தபசு செய்யப்பட்ட பாவங்களுக்காக மட்டுமல்ல, அதோடுகூட நம்மிடம் இருக்கும் பாவசார்பை, இச்சைகளை கட்டுப்படுத்தும் ஒரு உபாயமாகவும் திகழ்கிறது.

நாம் நம்முடைய பாவங்களுக்காக என்னதான் தபசு செய்தாலும், அது நமதாண்டவர் சேசுநாதருடைய பாடுகளோடு சம்பந்தம் இருக்காவிட்டால் அதனால், எந்த ஒரு பயனும் இல்லை. ஏனெனில், நம்முடைய பாவங்கள், அளவில்லாத நன்மைத்தனம் மிகுந்த சர்வேசுரனுக்கு எதிராக செய்யப்படுகிறது. இதற்கு அற்ப மனிதன் செய்யும் தபசு – பரிகாரம் எப்படி தகுந்த முறையில் ஈடு செய்ய முடியும்?

சேசுநாதர்சுவாமி வந்து பாடுகள்பட்டிராவிட்டால் நமக்கு பாவ விமோசனம் எங்கிருந்து வரும்? ஆகையால்தான், நமக்காக வந்து, பாடுபட்டு மரணம் அடைந்த நமதாண்டவருடைய பாடுகளுடன் நாம் ஒன்றித்து, அவைகளை தியானித்து, நம்முடைய பாவங்களும், உலக மாந்தர் அனைவரின் பாவங்களும் அவரை எவ்விதமாய் வதைத்து துன்புறுத்தியது என்று யோசித்து நமது பாவத்தை, பாவ வழிகளை அதற்கான சந்தர்ப்பங்களை உறுதியாக விட்டு விட நாம் பிரதிக்கினை செய்ய வேண்டும். நமது பாவங்களுக்காக நல்ல மனஸ்தாபத்துடன் பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும். நல்ல உத்தமமான மனஸ்தாபத்தை அடைவதற்கு வெறும் ஆத்தும சோதனை செய்தால் மட்டும் போதாது. ஆண்டவருடைய பாடுகளைத் தியானிக்க வேண்டும். வீட்டில் குடும்பமாகக்கூட அமர்ந்து ஆண்டவருடைய பாடுகளின் தியானத்தை வாசிப்பது மிகுந்த பயனளிக்கும் செயலாகும். முன்பு வியாகுலப் பிரசங்கங்கள் பாடலாக படிக்கும், கேட்கும் நல்ல பழக்கம் இருந்தது. அது மீண்டும் புத்துயிர் பெறவேண்டும் .

குறிப்பாக, இந்த வருடம் பிப்ரவரி 11–ம் தேதியோடு, நமது தேவதாய் லூர்து பதியில் அர்ச். பெர்னதெத்தம்மாளுக்கு காட்சியளித்து 150 ஆண்டுகள் நிறைவேறுகிறது. பெர்னதெத்திற்கு காட்சியளித்த தேவதாய் **"தவம் – தவம் – தவம்"** என்று தபசின் அவசியத்தை வலியுறுத்தினார்கள். அது எவ்வளவுக்கென்றால், காட்சி பெற்ற பெர்னதெத்தை அருகேயிருந்த புற்களை தின்னச் செய்தும், அற்புதமாய் சுரந்தோடிய நீரூற்றின் சகதியால் தன்னை பூசிக் கொள்ளும்படியாகவும் கேட்டார்கள் என்பதை லூர்து காட்சிகளின் வரலாறு நமக்கு விவரிக்கிறது. அன்றைய நிலையைவிட உலகின் இன்றைய நிலை – அதன் பாவங்களின் அகோரம், தன்மை, அளவு, கனம் அளவற்றதனமாகப் போய் விட்டிருப்பதை நாமறிவோம். குறிப்பாக, இயற்கை ஒழுக்க நெறிகளுக்கு எதிரான பாவங்கள் பெருகி விட்டதுமல்லாமல், அவைகள் பகிரங்கமாகக் கட்டிக்கொள்வதற்கு அரசுகளின் சட்டங்கள் ஆதரவாக இருக்கின்றன. இவற்றின் காரணமாக சர்வேசுரனுடைய கரம் உலகைத் தண்டிக்க ஓங்கி இருக்கிறது என்பதை யார்தான் மறுக்க முடியும்.

ஆகவே அன்று மாதா கேட்ட 'தவத்தின்' அவசியம் இப்போது நமது காலத்தில் எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். தேவதாயின் அன்பு மக்களாகிய நாம் வாழாதிருக்கலாமா? ஆகவே லூர்து பதியில் மாதா கேட்ட தவத்தை – தவமுயற்சிகளை மனமுவந்து செய்வோம். நம்முடைய பாவங்களுக்கும் உலகத்தார் அனைவரின் பாவங்களுக்கும் நாம் பரிகாரம் செய்வோம், தேவ கோபத்தைத் தணிப்போம். அதனால் மாதாவுக்கும் ஆறுதல் தருவோம்.

அதற்காக, கன்னிசுத்தம் கெடாத மாதாவிடம் சென்று, "கன்னியர் அரசே தாயே, என் கண்ணீரை உம்முடைய கண்ணீரோடேற்றருளும்" என்று இறைஞ்சுவோமாக !

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**

**பாளையங்கோட்டை**

முன்னிட்டே இருக்கிறது. பூசையை வெறும் நினைவு அல்லது சகோதரத்துவ உணவாக மாற்றுவது புராட்டஸ்டாண்ட் பதிதமாகும். 16-ம் நூற்றாண்டில் என்ன நடந்தது? இன்று நடப்பது போலத்தான் அன்றும் நடந்தன. தொடக்கம் முதல் பீடத்திற்கு பதிலாக மேஜையைப் போட்டு, சிலுவையை அகற்றி, "தலைமை தாங்கும் நபரை" விசுவாசிகள் பக்கமாய் திரும்பச் செய்யப்பட்டது. பிரான்ஸ் நாட்டில் "உயிருள்ள ஜெபம்" என்ற சிறுவர்கள் ஞானோபதேசத்திற்காகப் வெளியிடப்பட்ட புத்தகத்தில் *ஆண்டவர் தன்னுடைய நண்பர்களை கூடிவருமாறு அழைக்கிறார்; அவர்களோடு அவர் இருப்பார்*".

இத்தகைய கருத்திற்கு ஒவ்வொரு கத்தோலிக்கனும் "இல்லை! பூசை என்பது அதுவல்ல!" என்று தெளிவாக மறுப்புத் தெரிவிக்க வேண்டும். பூசை நமதாண்டவரின் உயிர்ப்புக்குப் பின்னர் ஒரு காலைப் பொழுதில் கடற்கரையோரமாக இராயப்பரையும், சீடர்களில் இன்னும் சிலரையும் அழைத்தது போன்ற விருந்தினர் (போஜனத்தின்) தொடர்ச்சி அல்ல.

பூசையில் விசுவாசிகள் உட்கொள்ளும் நற்கருணை, குருவானவர் உட்கொள்ளும் நற்கருணை என்பது பலிபீடத்தில் ஒப்புக்கொடுத்த பலிபொருளை உட்கொள்வதாகும். பூசை வெறும் உணவாக – போஜனமானால் குருவானவர் மக்களை நோக்கி திரும்பி நிற்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். விருந்திற்கு தலைமை தாங்கும் ஒருவன், விருந்தினர்களுக்கு தனது முதுகைக் காட்டி நிற்பது சரியல்ல. ஆனால், பலியானது மக்களுக்கல்ல, சர்வேசுரனுக்கே ஒப்புக்கொடுக்கப்படுகிறது. ஆகவேதான் குருவானவர் சர்வேசுரனை நோக்கி, பீட சிலுவையை நோக்கி திரும்பி நிற்கிறார்.

வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், புதிய ஞாயிறு பூசை புத்தகத்தில் பூசைபற்றிய குறிப்பு சொல்லும்போது "வெறும் வர்ணனை" என்ற கருத்து அழுத்தமாகக் கூறப்பட்டு வருகிறது. பாரீஸ் அதிமேற்றிராசனத்தின் அதிகாரப்பூர்வமான நற்செய்தி நடுவம் "நடு பூசையில் வர்ணனை தான் இருக்கிறது (வார்த்தை வழிபாடு)" என்று கூறுகிறது. இல்லை! பூசை ஒரு வெறும் வார்த்தையால் விவரிக்கப்படும் வர்ணனை அல்ல. அது ஒரு மெய்யாகவே நிகழும் **செயல்** (not a narrative; it is an action).

சிலுவைப் பலியின் நிறைவேற்றுதலுக்கு மூன்று இன்றியமையாத காரியங்கள் அவசியம். முதலாவது, **பலிபொருள்** ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். இரண்டாவது, பொருண்மை மாற்றம் (Transubstantiation) அதாவது மெய்யான தன்மை மாற்றம்; இம்மாற்றம் பலியாக்கப்பட்ட பொருளை மெய்யாகவே (வெறும் அடையாளமாக அல்ல) அங்கு கொண்டு வருகிறது. மூன்றாவது, பலியானது அபிஷேகம் செய்யப்பட்ட குருவானவரால், பெரிய குருவான நமதாண்டவரின் இடத்திலிருந்து ஒப்புக்கொடுக்க வேண்டும்.

அதே போன்று, பூசையானது பாவமன்னிப்பை பெற்று தரவல்லது. ஆனால் வெறும் நினைவு, போஜனத்துடன் வரும் நற்கருணை ஏற்படுத்தப்பட்ட சம்பவத்தின் வர்ணனை பாவப் பொறுத்தலை பெற்று தர போதுமானதல்ல. பூசையின் அனைத்து சுபாவத்துக்கு மேலான வல்லமை சிலுவைப்பலியுடன் அது கொண்டிருக்கும் தொடர்பிலிருந்து வருகிறது. இதனை விசுவசிக் காவிடில், திருச்சபையைப் பற்றிய எதையும் விசுவசிப்பதில்லை என்றாகி விடும், திருச்சபை இருப்பதற்கு எந்த ஒரு முகாந்தரமும் இல்லாமல் போய்விடும். அதோடுகூட கத்தோலிக்கர்கள் என்று சொல்லிக்கொள்ளவும் முடியாது. மார்ட்டின் லூத்தர், பூசையானது திருச்சபையின் இதயமும், ஆத்துமமுமாக இருப்பதை தெளிவாக புரிந்து வைத்திருந்தார். அதனால்தான் "பூசையை அழிப்போம், திருச்சபை அழிந்துவிடும்" என்று சொன்னார்.

இப்போது 2-ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு கொண்டு வரப்பட்ட பூசையான புதுப்பூசை, புராட்டஸ்டாண்ட் பதித பாணிக்கு ஏற்றவகையில் உருவாக்கப்பட்டிருப்பதை நாம் காண முடியும். லூத்தரைப் பொறுத்தவரையிலும், பூசை ஒரு புகழ்ச்சிப் பலி, அதாவது புகழ்ச்சியும், நன்றியறிதலும் கொண்ட செயல். அது நிச்சயமாக பாவத்தை பரிகரிக்கும் பலியல்ல. லூத்தரைப் பொறுத்தவரை சிலுவைப்பலியானது வரலாற்றில் நடந்து முடிந்துவிட்ட ஒன்று. கிறீஸ்துவின் பேறுபலன்களை அவருடைய மரணத்திலும்,



உயிர்ப்பிலும் நாம் கொள்ளும் விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். மாறாக திருச்சபையின் போதனை என்னவென்றால், ஒவ்வொரு திவ்விய பலிபூசையிலும், புதுப்பிக்கப்படும் சிலுவைப்பலியானது, நமது பீடங்களில் மறைபொருளான விதத்தில் (Mystically) திருசரீரமும், திரு இரத்தமும் அப்ப இரச வடிவில் பிரிக்கப்படுவதால், இரத்தம் சிந்தாத விதமாய் நிறைவேறுகிறது. இந்த புதுப்பித்தல், சிலுவையின் பேறுபலன்களை பூசையில் பங்கேற்கும் விசுவாசிகளுக்கு **இறுதிவரை தொடர்ந்து அளித்து,** இவ்வரப்பிரசாதத்தின் ஊற்றை **எக்காலத்திற்கும் எங்கும்** தொடரச் செய்கிறது. "இதோ உலகம் முடியும்வரை, எந்நாளும் உங்களோடுகூட நான் இருக்கிறேன்" என்று நமதாண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார்.

பூசைப்பற்றிய புதிய நவீன போதனைக்கும், திருச்சபை பாரம்பரிய போதனைக்கும் இருக்கும் வித்தியாசம் கொஞ்ச நஞ்சமல்ல. இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை திருவழிபாட்டில் எண்ணற்ற அடையாளங்களின் வழியாக நாம் காணமுடியும்.

# 'Sanguis Martyrum Semen Christianorum'

## (வேதசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

**வேதசாட்சிகளின் இரத்தம் சத்தியம் தழைக்கச் செய்யும் விதையாகத் திகழ்கிறது என்பது வரலாறு. கத். திருச்சபை 2000 ஆண்டுகளாக சந்திக்காத எதிர்ப்பு கலாபனை, ஆக்கினைகள் எதுவுமில்லை. ஆனால் இன்றும் அசையாமல் ஏக பரிசுத்த கத்தோலிக்க அப்போஸ்தலிக்கத் திருச்சபையாக தலை நிமிர்ந்து நிற்கிறது. தப்பறைகள் பிரிவினைகள் தாக்கினாலும் சத்தியம் தழைத்தோங்குவது கண்கண்ட ஒன்று. திருச்சபை சந்தித்த பிரிவினை – கலாபனைகளில் ஒன்று இங்கிலாந்து தேசத்தில் தோன்றிய ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பதிதம் – பிரிவினை ஆறாத வடுவாக இன்றும் நிலைக்கிறது. ஆனாலும் அந்த கலாபனையிலும் கத்தோலிக்கர்கள் தங்கள் வீர விசுவாசத்தை அறிவித்து இரத்தம் சிந்தி வேதசாட்சியம் அடைந்துள்ளார்கள். அவர்களை திருச்சபை அர்ச்சிஷ்டப்பட்டத்திற்கு உயர்த்தி, மகிமைப்படுத்தி அழகுபார்த்து, அவர்களது ஜீவியத்தை நமக்கு மேல்வரிச் சட்டமாகத் தருகிறது. அவர்களது வீர வைராக்கிய வரலாறு, நவீன காலத்தில் வாழும் கத்தோலிக்க மக்களாகிய நமக்கு அவர்களை கண்டுபாவித்து கத். விசுவாசத்தில் வளர உதவியாக இருக்கும். நவீனத்தால் பீடிக்கப்பட்ட திருச்சபைக்காக ஜெபிக்கவும், அதனை அகற்றிட பாடுபட நமக்கு உறுதுணையாகத் திகழும். அந்த கருத்துக்களுக்காக இத்தொடர் வெளியிடப்படுகிறது. – ஆசிரியர்**

## அர்ச். மார்க்கரேட் கிளித்தேரோ
## (1556 - 1586)



அன்று 1586 மார்ச் 25-ம் நாள் மரண தண்டனை நிறைவேற்றப்படவேண்டிய நாள். 30 வயதே நிரம்பிய குடும்பத் தலைவியான மார்க்கரேட் கிளித்தேரோ என்ற பெண்மணி தண்டனை நிறை வேற்றப்படும் இடத்திற்கு மிகவும் அமைதியாக ஆனால் மிகுந்த உற்சாகத்துடன் வந்தாள். அவளது நிர்மலமான முகத்தில் மகிழ்ச்சி நிரம்பி வழிய, சற்று நின்றவள் குனிந்து தனது காலுறைகளையும், காலணிகளையும் கழற்றி வெகு தொலைவில் நின்றுகொண்டிருந்த தனது மகள் அன்னாளிடம் கொடுத்து அனுப்பினாள். அவளும் தன்னைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆசை அவள் உள்ளத்தில் எழவே, மகளுக்கு அந்தப் பரிசு !


இரவு வெகு நேரம் விழித்திருந்து பாப்பரசருக்காகவும், கர்தினால்மார், ஆயர்கள், குருக்கள், ஏன் தன்னை சாவுக்குத் தீர்ப்பிட்ட இங்கிலாந்து அரசி எலிசபெத்திற்காகவும் மன்றாடியிருந்தவளது உள்ளம் ஜெபித்துக்கொண்டே இருந்தது. அங்கே மேடையில் இருந்த நகர அதிகாரி அவளது குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்கத் தூண்டவே, "இல்லை, இல்லை அதிகாரியவர்களே!, நான் எனது ஆண்டவர் சேசுவின் அன்பிற்காக சாகப் போகிறேன்" என்று பதிலளித்தாள்.

பின்னர் அவள் கூர்மையான கற்பாறையில் கிடத்தப்பட அவளது கரங்கள் சிலுவை அடையாளம் போல விரிக்கப்பட்டு இரு கம்பங்களில் கட்டப்பட, அவள் உடலில் ஒரு இரும்பு கதவு போடப்பட்டது. அந்த கதவு அவளது தேகத்தை மறைத்துக் கொள்ள அதன் மீது பெரும் பாரச் சுமைகள் போடப்பட்டன! அந்த பாரச் சுமை யோடு இரும்பு கதவு அவளை நசுக்க அந்த இளம் பெண்ணின் மெலிந்த, மெல்லிய தேகம் துடித்தது! அவள் அனுபவிக்கும் அந்த வேதனை கைகளின் அசைவுகளில் தெரிய, எந்த விதமான அழுகையோ, அவலக் குரலோ எழவில்லை. 15 நிமிடங்கள் அந்த பாரத்தால் நசுக்கப்பட்ட அவளது கரங்கள் "சேசு! சேசு! என் மீது இரக்கம் வையும்" என்ற இறுதி மன்றாட்டோடு மெல்ல மெல்ல அசைவின்றி விரைத்துப் போயின! ஆம்! அந்த பெண்மணி மரணமடைந்து விட்டாள். உடல் நசுக்கப்பட்டு வேதசாட்சியமடைந்து விட்டாள்!

அவள் செய்த குற்றம் என்ன? கத்தோலிக்கக் குருக்களை தனது இல்லத்தில் பாதுகாத்து காப்பாற்றியது! கத்தோலிக்க பூசையைக் கண்டது!!

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### **பூசை ஆரம்பம்** (தொடர்ச்சி)

### சம்மனசுக்களின் கீதம் - (Gloria)

சம்மனசுக்களின் கீதம் பாடும்போது குருவானவர், கரங்களைச சேர்த்து குவித்தவண்ணம், பீடத்தின் நடுவில் நிற்கிறார். அப்போது அவரது சில செய்கைகள், பாவனைகள் அவர் உச்சரிக்கும் வார்த்தைகளின் ஆழந்த அர்த்தத்தைச் சுட்டிக்காட்டுபவையாக இருக்கின்றன.

**-Gloria in excelsis...** என்ற வார்த்தையை உச்சரிக்கும்போது குரு தமது கண்களை மேலே ஏறெடுத்துப் பார்க்காமல் கரங்களை மட்டும் தனது தோள்பட்டைகள் வரையிலும் உயர்த்துகிறார். அவரது இந்த பாவனை சர்வேசுரனை மகிமைப் படுத்த, அவரது புகழைப்பாட அவருக்கு இருக்கும் ஆர்வத்தையும், ஏக்க ஆவலையும் உணர்த்துகிறது!

-"**...Deo...** சர்வேசுரனுக்கு ..." என்று சொல்லும்போது குரு மீண்டும் கரங்களைச் சேர்த்து பீடத்திலுள்ள பாடுபட்ட சிலுவையை தலை தாழ்த்தி குனிந்து பக்தியுடன் வணங்குகிறார். இப்படி தலை வணங்குதலை சம்மனசுக்களின் கீதம் முழுவதிலும் பல தடவைகள் செய்கிறார்.

அவை -"**...Adoramus te... - உம்மை ஆராதிக்கிறோம்**" என்று சொல்லும்போது தனது உள்ளார்ந்த ஆராதனை முயற்சியை வெளிக்காட்டவும்;

-"**...Gratias agimus tibi... - உமது மேலான மகிமையினிமித்தம்...**" என்று சொல்லும்போது சர்வேசுரன் பேரில் தமது நன்றியறிதலையும்,

-"**...Suscipe deprecationem nostram... - எங்கள் மன்றாட்டை ஏற்றுக்கொள்ளும்**" என்று உச்சரிக்கும்போது சர்வேசுரனிடம் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதையும்,

-"**...Jesu Christe... - சேசு கிறீஸ்துவே**" என்று சொல்லும்போது மிகுந்த சங்கையோடு சொல்கிறார். (குறிப்பு: பூசையில் எவ்விடங்களிலெல்லாம் "**சேசு**" என்ற நாமம் உச்சரிக்கப்படுகிறதோ, அவ்வமயம் குருவானவர் தலைகுனிந்து வணங்குவதை நாம் கவனிக்கலாம்).

இவ்வாறு வணக்க – சங்கையின் வெளிப்பாடுகளை குரு வெறும் வார்த்தைகளால் மட்டுமல்லாமல் தமது உடல் அசைவினாலும், பாவனையினாலும் வெளிப்படுத்துகிறார்.

பின்னர் "**Gloria** – சம்மனசுக்களின் கீதத்தின்" இறுதி வார்த்தைகளின்போது, பலி செலுத்துபவர் தம்மீது சிலுவை அடையாளத்தை வரைந்து கொள்கிறார். பொதுவாக மிக உந்நதமான பாடலைப் பாடி முடிக்கும்போது, இப்படியாக சிலுவை அடையாளத்தை வரைவது மரபானாலும், இங்கே, பூசை ஆரம்பத்தில் குரு வரையும் சிலுவை அடையாளமானது தமத்திருத்துவத்தைச் சுட்டிகாட்டி உணர்த்துவதுமல்லாமல், பாடலின் இறுதியில் மகா பரிசுத்த தமத்திருத்துவத்திற்கு மகிமையையும் வெளிக்காட்டுவதாக இருக்கிறது.

இந்த "சம்மனசுக்களின்கீதம்" சம்மனசுக்குரிய பக்தி வணக்கத்தோடு சொல்லப்பட்டு, பாடப்பட வேண்டும். இதனை பூசையில் சொல்லும்போது நாம் நமது இருதயத்தையும், உதடு களையும் மோட்ச சேனைகளின் பாடற்குழுவினரோடு இணைக்கிறோம். இதனால் தினமும் தேவ சந்நிதானப் பீடத்தைச் சுற்றிலும் சூழ்ந்து, முடிவில்லாத களைப்பில்லாத வகையில் சர்வேசுரனின் புகழ்ச்சியைப் பாடும் அவர்களோடு – அந்த மோட்ச சேனைகளின் கூட்டத்தோடு நாமும் நமது மகிழ்ச்சியையும் சேர்த்து, சர்வேசுரனைப் புகழ்ந்து ஏற்றுகிறோம். இந்த கீதம், தீர்ப்பிடப்பட்ட மனிதருக்கு மோட்சத்திலிருந்து ஒரு மீட்பரை அனுப்பி வைத்து, அதனால் அகில உலகிற்குமே அற்புதமான மகிழ்ச்சி வந்ததைச் சுட்டிக்காட்டி இசைக்கப்படுகிறது.

இந்த சம்மனசுக்களின் கீதமானது, தமது வாழ்நாள் அனைத்திற்கான தேவைகளை சர்வேசுரனிடமிருந்து பெற்றுக் கொண்டதற்கு திருச்சபையின் நன்றியாகவும், அவற்றை இன்னும் வருங்காலத்திலும் பெற்றுக்கொள்வதற்கான பக்தியுள்ள மன்றாட்டாகவும் திகழ்கின்றது. நாம் நமது அனைத்து விருப்பங்கள், ஆவல்களையெல்லாம் சர்வேசுரனிடமிருந்து பெற்றுக்கொண்டோம், அவர் நமது கூக்குரலை – மன்றாட்டைக் கேட்டருளினார் என்ற உணர்வோடும் இந்த கீதத்தை குருவானவர் மிகுந்த மகிழ்ச்சியோடு சர்வேசுரனுக்கு நன்றிப் புகழ்ச்சியாக "**உன்னதங்களில் சர்வேசுரனுக்கு மகிமையும் பூலோகத்தில் நல்ல மனதுள்ள மனிதருக்குச் சமாதானமும் உண்டாவதாக...**" என்று கூறி துவக்குகிறார். விசுவாசிகளும் பக்தியால் தூண்டப்பட்டு, தங்கள்

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (8) கன்னிசுத்தம் கெடாத மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

"ஒரு பெண் கடவுளின் தாய்" என்பது புத்திக்கு எட்டாத சத்தியம். அதுவும், அப்பெண்மணி தன் கன்னிமையை இழக்காமலே சர்வேசுரனுக்குத் தாயாகும் பேறு பெற்றவள் என்பது இன்னும் அதிசயமான ஒன்று! ஆம், அதுவே உண்மை! கடவுளின் தாயான மாமரி, கன்னிசுத்தங் கெடாத மாதாவாக இருக்கிறார்கள். இதுவே சத்திய திருச்சபையின் சத்திய வாக்கு! இதனால் தான் திருச்சபை அவர்களை "பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே" என்று வாழ்த்திப் புகழ்ந்தது; ஆனால் அதோடு திருப்தியடையாமல், அப்பெரும் பாக்கியத்துக்காக அவர்களை மீண்டும், மீண்டும் புகழ ஆவல் கொண்டு **"கன்னிசுத்தம் கெடாத மாதாவே"** என்று மறுபடியும் வாழ்த்துகிறது.

### கன்னித் தாய் !

அர்ச். மரியம்மாள் "கன்னித்தாய்" என்ற புகழுரையின் உட்பொருளை சற்று ஆராய்ந்து பார்ப்போமேயானால், அதில் சர்வேசுரனுடைய வல்லமை வெளிப்படுவதை நாம் அறியலாம். ஆம்! சர்வேசுரனால் எல்லாம் கூடும்.



கிறீஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பே ஆக்காஸ் என்ற யூத அரசனுக்கு சர்வேசுரனுடைய சர்வ வல்லமையை எடுத்துரைக்க இசையாஸ் தீர்க்கதரிசி ஒருபோதும் கூடாத ஒரு காரியத்தைத் தீர்க்கதரிசனமாகக் கூறினார். அது என்னவெனில், "ஒரு கன்னிகை கர்ப்பந்தரித்து குமாரனைப் பெறுவாள்" (இசை. 7:9) என்பதே! அதை நம்பாமல் வியந்து போன அரசனுக்கு தமது தீர்க்கத்தரிசனத்தை உறுதிப்படுத்த சூரிய கடிகாரத்தின் பாகைகள் பின்செல்ல வைத்து நிரூபித்துக் காட்டினார். எந்திரத்தனமுள்ள கடிகாரத்தின் பாகை எப்படி பின்னிட்டுச் செல்ல முடியும்? அதுபோலவே எப்படி தன்னுடைய கன்னிமையை இழக்காமல் ஒரு பெண் கருத்தாங்க முடியும்? ஆனால் சர்வேசுரனாலே எல்லாம் முடியும். பின்னாளில் வரவிருக்கிற மெசியாவின் தாய் சர்வேசுரனின் சர்வ வல்லமையும் துவங்க கன்னிசுத்தம் கெடாத மாதாவாக ஏற்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆக, கன்னித்தாய் என்ற மாமரியின் சலுகை சர்வேசுரனின் வல்லமைக்கு சான்றாகப் பிரகாசிக்கின்றது. ஏனெனில் தேவனால் எல்லாம் முடியும்!

### நித்திய கன்னித் தாய் !

தேவதாய் நித்திய கன்னிகையாக இருக்கிறார்கள். சுவிசேஷத்தில் கபிரியேல் தூதர், பரிசுத்த மரியம்மாளை வாழ்த்தி "... உமது உதரத்தில் கெற்பந் தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர்..." (லூக். 1:31) என்று கூறினார். அதனால் கலக்கமடைந்த மரியாய் "இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே..." (லூக். 1:34) என்று வினவினார்கள். ஏனெனில் அவர்கள் கன்னிமை விரதம் பூண்டு, நிறைகன்னியாக தன்னை முழுவதும் சர்வேசுரனுக்கு அர்ப்பணித்திருந்தார்கள். ஆகவேதான் மாதா இவ்வாறு வினவினார்கள். அதற்கு மதிப்பளித்த சர்வேசுரன் அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசன அடையாளத்தைத் தந்தார். அது என்னவெனில், குழந்தை பேறு அடையமுடியாத மலடியான வயது கடந்துவிட்ட எலிசபெத்தம்மாள் 'புத்திரனைப்' பெறுவாள் என்பதே! ஆம். "சர்வேசுரனால் கூடாத வாக்கு ஒன்றுமில்லை" (லூக். 1:37). ஆகவேதான் ஒரு கன்னிகை கர்ப்பந்தரிப்பதும் – கடவுளைப் பெற்றெடுப்பதும் சர்வேசுரனால் முடியும்! அதிலே அவரது வல்லமை விளங்குகிறது. எனவேதான் மகா பரிசுத்த மரியம்மாள் கடவுளின் தாயாகவும், கன்னிசுத்தம் கெடாத மாதாவாகவும் இருக்கிறார்கள்.

ஆகவேதான் பரி. மரியாயைக் குறிப்பிடும்போதெல்லாம் திருச்சபையும், ஏன் மனுக்குலமும் அவர்களை "கன்னிமரியம்மாள்" என்ற அடைமொழியோடு அழைக்கின்றது! சத்தியத் திருச்சபை தனது 'தவறாவரத்துடன்' தேவதாய் "நித்திய கன்னிகை" (SEMBER VIRGO) என்று போதிக்கிறது.

ஆக, தேவதாய் சேசுவை பெற்றெடுக்கும் முன்பும், பெற்றெடுக்கும் போதும், பெற்றெடுத்தப் பின்னரும் கன்னிமை குன்றாத மலராக – சர்வேசுரனின் (வல்லமை துலங்கும்) மகிமையாக பிரகாசிக்கின்றார்கள். எனவே அத்தாயின் அன்பு மக்களாகிய நாம் திருச்சபையோடு சேர்ந்து **கன்னிசுத்தம் கெடாத மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்** என்று வாயாரப் புகழ்ந்து மன்றாடுவோமாக!

வல்லமைமிக்கதாக இருக்கிறது.

ஆண்டவருடைய பாடுகளை விசுவாசத்துடனும், பக்தியுடனும் தியானித்தால், சர்வேசுரனுடைய அன்பும் நீதியும் நமக்கு வெளிப்படுத்தப்படும். அதோடு நமது தாழ்நிலையையும், பலவீனங்களையும், நமது ஒன்றுமில்லாமையையும் அறிந்து கொள்வோம். அதோடு நமது புத்தியறிவினால் நாம் அறிவதைவிட, மேலான விதத்தில் நமது பாவத்தின் கனாகனத்தையும் அதன் அருவெருப்பையும் அறிய வருவோம்.

ஆண்டவருடைய பாடுகளை தியானிப்பதால் கிடைக்கின்ற பலன்களை சிறிது விளக்கியப் பிறகு, வாசித்து தியானிப்பதற்கு சில சிந்தனைகளை தருவது நல்ல பலனளிக்கும் என்று நம்புகிறோம்.

## சேசுவின் பாடுகளின் தியானம்.

வேதசாட்சிகளுடைய மரணத்தைப் பார்த்து திருச்சபை மிகவும் அக்களிப்புக் கொள்கிறது. ஏனென்றால் அவர்களுடைய மரணம் திருச்சபையுடைய மகிமையாக, வெற்றியாகத் திகழ்கின்றது. அவர்களின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறுகின்றது. அதனால் திருச்சபை வளர்கிறது. வேதசாட்சிகளுடைய மரணத்திற்கு நாம் காரணமல்ல, அவர்களுடைய இரத்தம் நம்மை கறைப்படுத்துவதில்லை; ஆனால் திருச்சபை தனது மகா பரிசுத்த பத்தாவான சேசு கிறீஸ்துவின் பாடுகளை, மரணத்தைக் குறித்து மிகவும் துக்கிக்கிறது, விசனப்படுகிறது. எதற்கென்றால் அவருடைய பாடுகளுக்கு, இரத்தம் சிந்துதலுக்கு திருச்சபையின் மக்களாகிய நாமும் காரணமாக இருக்கிறோம். மெய்யாகவே சேசுநாதருடைய உயிரைப் பறித்த கொலையாளிகளாக இருக்கிறோம். ஆம், கடவுள் – மனிதனான சேசு 30 வெள்ளிக் காசுகளுக்கு விற்கப்படுவதற்கு – காட்டிக் கொடுப்பதற்கு, கன்னத்தில் அறையப்படுவதற்கு, பழித்து நிந்திக்கப்படுவதற்கு, இரத்தம் சிந்தி அகோரமாக சிலுவை மரணம் அடைவதற்கு நாம் தான் காரணம்! தனது நேசரின் மரணத்திற்கு தன்னுடைய பிள்ளைகளே காரணமாய் இருப்பதைக் கண்டு திருச்சபை மிகவும் துக்கப்படுகிறது. சேசு கிறீஸ்துநாதர் துன்பம் அனுபவிப்பதைக் கண்டும், அவரைத் துன்பப்படுத்துபவர்களுடைய கொடூரத் தன்மையைக் கண்டு வேதனைப்படுகிறது திருச்சபை. அதனுடைய துக்கத்தோடு நாமும் துக்கித்து திரளான கண்ணீர் சிந்துவோமாக!

## சேசுநாதர் ஜெத்சேமனித் தோட்டத்தில் இரத்தவியர்வை வியர்க்கிறார்.

*(அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் எழுதிய சேசு கிறீஸ்துவின் பாடுகளும், மரணமும் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)*

### I

இதோ, நம்முடைய நேச ஆண்டவர் ஜெத்சேமனி என்னும் தோட்டத்தில், தன்னுடைய கசப்பான பாடுகளை அனுபவிப்பதற்கு மனமுவந்து கையளிக்கிறார். அவர் "பயப்படவும், சலிப்படையவும்" (மாற். 16:33) "துயரப்படவும், ஆயாசப்படவும்" (மத். 26:37) தொடங்குகிறார்.

முதலில் தாம் அடையவிருக்கும் மரணத்தைக் குறித்தும், படப்போகும் பாடுகளைக் குறித்தும், நினைத்து, யோசித்து பயப்படுகிறார். நம் ஆண்டவர், தானாக முன்வந்து தன்னையே இப்பாடுகளுக்குக் கையளித்தார். அப்படியானால் பின் ஏன் பயப்பட வேண்டும்? "அவர் தானே இஷ்டப்பட்டு நிவேதனமாயினார் (பலிப்பொருளானார்)" (இசை. 53:7). அவர் தாமே விரும்பி அல்லவா



தன்னையே ஒப்புக் கொடுத்தார் என்கிறார். இப்பாடுகளின் நேரத்திற்கு விரும்பி அல்லவா காத்திருந்தார். சற்று முன்னர் தான், இராப்போஜனத்தின் போது, "நான் பாடுபடுவதற்கு முன்னே இந்தப் பாஸ்காவை உங்களோடு கூட உண்ணும்படி ஆசைமேல் ஆசையாயிருந்தேன். . ." (லூக். 22:15) என்று சொன்னார் அன்றோ? இப்படிக் கூறியவர் கொடூர மரண பயத்தால் ஆட்கொள்ளப்பட்டு, தன்னுடைய பிதாவை நோக்கி, "என் பிதாவே! கூடுமாகில் இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலக்கடவது. ஆகிலும் என் மனதின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும்" (மத். 26:39) என்று எப்படி அபயமிடுகிறார்?! வந். பீட் என்பவர் இந்த ஆச்சரியமான கேள்விக்கு பதில் தருகையில் ". . . இப்படிச் சொல்லியது, தான் மெய்யாகவே மனிதனாக இருக்கிறார் என்பதைக் காண்பிக்கவே" என்று கூறுகிறார். நமது நேச இரட்சகர் தன்னுடைய மரணத்தினால், நம் மேல் அவர் கொண்டிருந்த நேசத்தைக் காண்பித்தது மட்டுமின்றி, தான் (சில பதிதர்கள் தேவ தூஷனம் சொல்வது போல்) "அசாதாரணமான சரீரத்தில்" அல்லது "தனது தெய்வீகத்தின் உதவியால் எந்த விதமான துன்ப வருத்தமின்றி இறந்தார்" என்று எண்ணாதவாறு செய்வதற்காகவே இந்த அபயக் குரலை தனது பிதாவை நோக்கி எழுப்பினார். இந்தக் கூக்குரல், தனது ஜெபத்தை பிதா கண்டிப்பாய் கேட்க வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக, இதன் மூலம் அவர் மெய்யாகவே மனிதனாய், மரணப்

*(தொடர்ச்சி 18–ம் பக்கம் காண்க.) . . .*

எடுக்க வேண்டும். நாம் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்ய முடிவு செய்தால், நமது வாழ்வை சுவிசேஷப் போதனைகளின்படி அமைத்துக்கொள்ள ஆசித்தால், நமது இல்லங்களில் உலக சார் பானவைகளை அறவே ஒழிக்க வேண்டும். சர்வேசுரனுக்கு விரோத மான உலக காரியங்கள் நமது இல்லத்தில் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால், நாம் நிச்சயமாக உலகத்திற்கே நமது உள்ளத்திலும், இல்லத்திலும் இடம் கொடுத்தவர்களாகி விடுவோம்! (தொடரும்)

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

விசுவாசிகள் பயனடையும்படியாக இங்கே பிரதான மந்திரங்களுடைய விளக்கங்கள் தரப்படுகின்றன – (ஆசிரியர்)

## அருள்நிறை மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

(2) **ஏன் அர்ச். கன்னிமரியம்மாள் ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்தாள் ?** – அவள் தேவமாதாவென்னும் பட்டத்திற்குக் குறிக்கப்பட்டவளாய் இருந்ததினாலேயும், அவளுடைய பரிசுத்த இரத்தத்திலிருந்து சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச் சரீரம் உண்டாக்கப்பட வேண்டியிருந்ததினாலேயும், அந்த மேன்மை நிறைந்த ஆண்டவள் ஜென்மப்பாவ தோஷத்தோடு ஒரு க்ஷணமுதலாய்ப் பசாசுக்கு அடிமையாயிருப்பது பரிச்சேதம் பொருந்தாத காரியம். பாவத்தின்பேரில் அளவில்லாத பகையுள்ள சர்வேசுரன் இப்பேர்ப்பட்ட அவமானம் தமது தாயாருக்கு நேரிடும்படி செய்வது சற்றேனும் கூடாத விஷயம். அதினாலே அவளைத் தமது விசேஷ பட்சத்தினிமித்தம் பசாசின் அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்றி இரட்சித்தருளினார்.

(3) **அர்ச். கன்னிமரியம்மாளிடத்தில் ஜென்மப்பாவம் இல்லையென்பது வேத சத்தியம் :** – சேசுநாதருடைய பேறுபலன்களைக் குறித்து தேவமாதா முன்னதாகவே ஜென்மப்பாவ தோஷத்தினின்று முற்றிலும் காப்பாற்றப்பட்டாளென்று சகல கிறீஸ்துவர்களும் எப்போதும் விசுவசித்து வந்தமையால், உலகத்தின் எத்திசையிலுமுள்ள மேற்றிராணிமார்கள் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்திற்கேற்ப, நமது பரிசுத்த தந்தையாகிய 9-ம் பத்திநாதர், தமக்களிக்கப்பட்ட தவறாத வல்லபத்தைக்கொண்டு இதை விசுவாச சத்தியமாக நிரூபித்தருளினார்.

**3. அர்ச். தேவமாதாவிடத்தில் இஷ்டப்பிரசாதமும் பேறுபலன்களும் வளர்ந்ததெப்படி?** – தன் நீடிய ஆயுசு காலத்தில் இடைவிடாமல் மிக்க அபூர்வமான புண்ணியங்களைச் செய்ததினால், அவளுக்குண்டான அதி உன்னத மேன்மையை எடுத்துரைத்தல் எளிதல்ல.

(1) அர்ச். கன்னிமாதா அடைந்த பேறுபலன்களின் அளவு பிரமாணத்தைச் சற்றாகிலும் கண்டுபிடிக்கும்படி நாம் அறியவேண்டியதாவது : மனிதன் இவ்வுலகத்தில் ஜீவிக்கும் போது, இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருந்து செய்கிற ஒவ்வொரு அற்பப் புண்ணியக் கிரிகைக்கும் அவன் ஆத்துமத்தில் இருக்கிற இஷ்டப்பிரசாதம் அதிகரிக்கிறதுமன்றி, மோட்சத்தில் அவனுக்குள்ள பேறுபலன்களும் மிகுதியாகின்றன. மேலும் யாதொரு நற்கிரிகையை எவ்வளவுக்கு மிகுந்த தேவ சிநேகத்தோடு செய்கிறானோ அவ்வளவுக்கு அவனிடம் ஏற்கனவே இருக்கிற இஷ்டப்பிரசாதமும், பேறுபலன்களும் **அதிகரிக்கின்றன** என்பது வேதசாஸ்திரிகளின் துணிபு.

(2) **அர்ச். கன்னிமரியம்மாள் தன் தாயின் உதரத்தில் உற்பவித்த க்ஷணத்திலேயே, மற்றச் சிருஷ்டிகளெல்லாவற்றையும் விட அதி மேன்மையான தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பெற்றிருந்தாள்.** – அவள் செய்த ஒவ்வொரு சொற்பக் கிரிகையினாலும் அவளிடத்தில் ஏற்கனவே இருந்த இஷ்டப்பிரசாதமும் பேறுபலன்களும் அப்போதைக்கு அப்போதே இரட்டித்துப் பெருகி வந்தன. அர்ச். கன்னிமரியாயி தன் ஜீவிய காலமெல்லாம் சர்வேசுரனோடு பிரியாத ஐக்கியமாயிருந்து, அவருடைய சிநேகத்துக்காக மாத்திரம் சகல காரியத்தையுஞ் செய்து வந்ததால், அவள் எவ்வளவு தேவ இஷ்டப்பிரசாதமும் பேறுபலன்களும் அடைந்திருக்க வேண்டுமென்று யோசிக்கும்போது, நமது புத்தி பிரமிப்பினால் கலங்கித் தடுமாறிப் போகிறது.

**4. தேவ இஷ்டப்பிரசாதத்தின் அளவும், நமது பேறுபலன்களின் அளவும் எம்மாத்திரம் பெரிதாயிருக்குமோ**, அம்மாத்திரம் மோட்சத்தில் மேன்மையும், பாக்கியமும் பெரிதாயிருக்கும். இது இப்படியிருக்க, தேவதாய்க்குப் பரலோகத்தில் இருக்கிற பிரதாப மகிமை என்னவென்று சொல்வோம் ! மோட்சத்தில் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கிற பாக்கியத்துக்குப்பின், அர்ச். கன்னிமரியாயின் மாட்சிமையையும், பெருமையையும், பாக்கியத்தையும் பார்த்து அக்களிக்கிறதுதான் நமக்குப் பேரின்பமாயிருக்கும். (தொடரும்)

**அர்ச். தேவமாதாவுக்கு சர்வேசுரன் அளித்த ஞானம், வல்லமை, இரக்கம் என்னும் மூன்று வரங்களைக் குறித்து அநுதினமும் காலையிலும் மாலையிலும், மூன்று அருள் நிறை ஜெபம் சொல்லி, "மரியாயே! என் நல்ல தாயே! இன்றைக்குச் சாவான பாவத்திலிருந்து என்னைக் காத்தருளும்" என்ற ஜெபத்தை ஜெபிப்பதைவிட இலேசானதும் யாவராலும் எளிதாய் அநுசரிக்கக்கூடியதுமான பக்தி முயற்சி வேறில்லை. கடைசி பரியந்தம் புண்ணியத்தில் நிலைகொள்வதற்கும் நல்ல மரணம் அடைவதற்கும் இப்பக்தி முயற்சி தக்க வழியென்று தேவதாயார் தாமே அர்ச். மெல்தில்லம்மாளுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.** – 13-ம் சிங்கராயர் (200 நாள் பலன்).

2. அநுசரிப்பு : **பாஸ்குத் திருநாள்:** திருநாட்கள் எல்லாவற்றுள்ளும் விசேஷமானது. நாமும் பாவத்திலிருந்து கிறீஸ்துவோடு உயிர்க்க வேண்டும். இதன்பின் வரும் ஐந்து வாரங்களிலே கிறீஸ்துநாதர் தம் திருச்சபையை ஸ்தாபித்து, நாற்பதாம் நாள் பரலோகத்திற்கு ஆரோகணமானதையும், அதன்பின் பத்தாம் நாள் இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கி வந்ததையும் ஞாபகப்படுத்தும்.

3. நீட்டிப்பு : **இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப் பின்வரும் காலம்:** 24 முதல் 28 வாரங்கள் வரை நீடிக்கும். இஸ்பிரீத்துசாந்துவினாலும். திவ்விய சற்பிரசாதத்தினாலும், திருச்சபை உலகம் முடியுமட்டும் வளர்ந்து வருவதைக் குறிக்கும். மற்றக் காலங்களை விட இதுவே அதிக நீண்டது ; ஆகமன காலம் வரையில் நீடிக்கும். இதன் பிறகு காலச்சக்கரம் திரும்பவும் துவக்கும்.

## II அர்ச்சிஷ்டவர்களின் காலச் சக்கரம்

நமதாண்டவரின் பரம இரகசியங்களின் அநுசரிப்பினிடையில், அவருடைய ஜீவியத்தைக் கண்டுபாவித்த பரிசுத்தவான்களுடைய திருநாட்களும் அடங்கியுள்ளன.

1. முதன் முதலில் **பரிசுத்த கன்னிமரியம்மாளின்** திருநாட்கள். இவள் வழியாக நமக்கு இரட்சணியங் கிடைத்ததாலும், கிறீஸ்துவின் பரம இரகசியங்களில் மற்றவர்களை விட இவளே அதிகமாய்ப் பங்கு பெற்றவளானதாலும், இவளுடைய மகிமையை வருஷத்தில் பன்முறை கொண்டாடுகிறோம். பின்னர் பரிசுத்த சம்மனசுக்களும், சகல அர்ச்சிஷ்டவர்களும் நமது வணக்கத்துக்கு உரியவர்களாகின்றனர்.

2. ஒவ்வொரு நாட்டின், மேற்றிராசனத்தின், அல்லது பங்குக் கோவிலின் பாதுகாவலர் ; ஒவ்வொரு தேசத்திலும் தோன்றிய அர்ச்சிஷ்டவர்கள் ; இவர்களுடைய திருநாட்கள்.

3. தேவாலய அபிஷேகக் கொண்டாட்டங்கள்.

## தேவ ஆராதனைக் காலப் பிரிவுகளின் அடக்கம்

| **I. கிறீஸ்து பிறப்பின் காலம் - கிறீஸ்துவின் மனிதாவதாரத்தின் பரம இரகசியங்கள்** | | |
|---|---|---|
| 1. ஆயத்தம்: (ஊதா நிறப் பூசை உடுப்புகள்)<br>2. அநுசரிப்பு: (வெள்ளை நிற உடுப்புகள்)<br>3. நீட்டிப்பு: (பச்சை நிற உடுப்புகள்) | கிறீஸ்து பிறப்பு<br>மூன்று இராஜாக்கள் திருநாள் | 1. **ஆகமன காலம்** (4 ஞாயிறுகள்) (ஆகமன கால முதல் ஞாயிறிலிருந்து டிசம்பர் 24-ம் தேதி வரை)<br>2. **கிறீஸ்து பிறப்பின் காலம்** (2 அல்லது 3 ஞாயிறுகள்) (டிசம்பர் 24-ம் தேதியிலிருந்து ஜனவரி 14-ம் தேதி வரை)<br>3. **மூன்று இரா. திரு. பின் காலம்** (1 - 6 ஞாயிறுகள்) (ஜனவரி 14-ம் தேதி முதல் சப்தரிகை காலம் வரை) |
| **II. பாஸ்குத் திருநாட் காலம் - மனித இரட்சண்ணியத்தின் பரம இரகசியங்கள்** | | |
| 1. ஆயத்தம்: (ஊதா நிற உடுப்புகள்) | சேய்மை ஆயத்தம்<br>அன்மை ஆயத்தம்<br>நெருங்கிய ஆயத்தம் | 1. **சப்தரிகை காலம்** (3 ஞாயிறுகள்) (சப்தரிகை, சடிகை, பஞ்சிகை)<br>2. **சதுரிகை காலம்:** தபசு காலம் (4 ஞாயிறுகள்) (விபூதித் திருநாளி லிருந்து பாடுகள் ஞாயிறு வரை)<br>3. **பாடுகளின் காலம்:** (2 ஞாயிறுகள்) (பாடுகள் ஞாயிறிலிருந்து பாஸ்குத் திருநாள் வரை) |
| 2. அநுசரிப்பு: (வெள்ளை நிற உடுப்புகள்) | பாஸ்குத் திருநாள்<br>இஸ். சாந்து திருநாள் | 4. **பாஸ்குத்திருநாட் காலம்:** (7 ஞாயிறுகள்) (பாஸ்கு ஞாயிறிலிருந்து தமதிரித்துவத்தின் திருநாள் வரை |
| 3. நீட்டிப்பு: (பச்சை நிற உடுப்புகள்) | | 5. **இஸ். சாந். திரு. பின்வருங்காலம்:** (24 - 28 ஞாயிறுகள்) (தமதிரித்துவத்தின் ஞாயிறிலிருந்து ஆகமனகால ஞாயிறு வரை) |

**10-ம் காட்சி:** (பிப்ரவரி 27 - ம் நாள் சனி)

'மௌனமாக' இருக்க சிறுமி நீரூற்றிலிருந்து நீர் பருகி, தரையை முத்தமிட்டு பாவங்களுக்கு தபசு செய்கிறாள்.

**11-ம் காட்சி:** (பிப்ரவரி 28 - ம் நாள் ஞாயிறு)

தபசு - பெர்னதெத் முதல் நாள் செய்ததை போல் தவ முயற்சியைச் செய்ய, கூட்டத்தினர் அவளைக் கண்டுபாவிக்கிறார்கள்.

**12-ம் காட்சி:** (மார்ச் 1 - ம் நாள் திங்கள்)

முதல் புதுமை நடக்கிறது. கத்தரீன் லதாபி என்ற பெண் செயல் இழந்த கையை நீரூற்றின் நீரில் நனைக்க சுகமடைகிறாள்.

**13-ம் காட்சி:** (மார்ச் 2 - ம் நாள் செவ்வாய்)

குருக்களுக்குச் செய்தி - "குருக்களிடம் சென்று இங்கு சுற்றுப்பவனியாக வரவேண்டும், ஒரு சிற்றாலயம் கட்ட வேண்டும் என்று சொல்!"

**14-ம் காட்சி:** (மார்ச் 3 - ம் நாள் புதன்)

கெபிக்கருகே 3000 மக்கள் கூடியிருக்க பெர்னதெத் மீண்டும் ஒரு முறை அம்மாதரசியின் பெயரைக் கேட்கிறாள். ஆனால் புன்முறுவலே பதிலாக வருகிறது.

**15-ம் காட்சி:** (மார்ச் 4 - ம் நாள் வியாழன்)

அதிக எதிர்ப்பார்ப்புடன் காத்திருந்த நாள். 8000 மக்கள் கூடியுள்ளார்கள். காட்சியளிக்கும் மாது மௌனமாயிருந்தார்கள்.

**16-ம் காட்சி:** (மார்ச் 25 - ம் நாள் வியாழன்)

பெயர் கூறல் - சிறுமி மீண்டும், மீண்டும் விடாமல் அவர்களது பெயரைக் கேட்க, அம்மாதரசி தமது கண்களை வான்நோக்கி உயர்த்தி, பூமியை நோக்கி கரங்களை விரித்து, பின்னர் ஜெபிக்கும் பாவனையாக "**நாமே அமலோற்பவம்**" என்று கூறினார்கள்.

**17-ம் காட்சி:** ஏப்ரல் 7 - ம் நாள் புதன்)

**எரியும் திரி புதுமை!** காட்சியின் போது கையில் எரியும் மெழுகுதிரியை ஏந்திய பெர்னதெத், பரவசமடைந்த போது திரியின் சுடர் அவளது கைகளில் வெகு நேரம் பட்டும், சுட்டெரிக்காமல் - காயமின்றி இருந்தது.

**18-ம் காட்சி:** ஜுலை 16 - ம் நாள் வியாழன்)

கார்மெல் மாதா திருநாள் - இதுவே கடைசி காட்சி.

லூர்துபதி காட்சிகளின் 150-வது ஆண்டு நிறைவான இவ்வாண்டில் தேவதாய் கேட்டுக்கொண்டபடி பாவிகள் மனந்திரும்பவே நமது பாவங்களுக்குப் பரிகாரமாக தவம் செய்வோமாக !

✶✶✶✶✶✶

*. . . (12-ம் பக்கம் தொடர்ச்சி)*

பயத்தால் பீடிக்கப்பட்டு துன்ப வருத்தங்களை அனுபவித்து மரித்தார் என்பதற்காகவே!

## II

"சலிப்படையத் தொடங்கினார்". சேசுநாதர் தமக்கு ஆயத்தம் செய்யப்பட்டிருந்த வேதனைகளை, கொடூரத்தை நினைத்த மாத்திரத்தில் சலிப்படையலானார். சலிப்படைந்திருக்கிற ஒருவருக்கு கரும்பும்கூட கசப்பானதாகத்தான் இருக்கும். தன்னுடைய மனக் கண்களுக்கு முன் காண்பிக்கப்பட்ட கொடூரமான காரியங்கள், தனது வாழ்வின் இறுதியின் கொஞ்ச காலத்தில் அவருடைய ஆத்துமத்திலும், சரீரத்திலும், அகத்திலும் புறத்திலும் தாம் அனுபவிக்க இருந்த அனைத்து சித்திரவதைகளும், சேசுநாதரை எவ்வளவு மனச் சலிப்படையச் செய்திருக்கும்!

அவ்வேளையில், அவர் அனுபவிக்கவிருக்கும் வாதைகள், யூதர்களிடமிருந்தும், உரோமை படை வீரர்களிடமிருந்தும் பெறவிருக்கும் நிந்தை அவமானங்கள், ஏளனப் பேச்சுக்கள், நீதிபதிகளின் அநீதங்கள்; அனைவராலும் புறக்கணிக்கப்பட்டவராய், மனிதர்களாலும் ஏன், சர்வேசுரனாலும் கைவிடப்பட்டவராக மரணமடையும் காட்சி என இவை அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக அவருடைய மனக் கண்களுக்கு முன்பாக வந்தன. இதனால் சலிப்படைகிறார். அதன் காரணமாகத்தான் அவர் தம் பரம பிதாவை நோக்கி ஆறுதலுக்காக ஜெபித்தார். "ஒரு தேவதூதன் அவருக்குத் தோன்றி, அவரைத் தேற்றினார்" (லூக். 22:43). சம்மனசு வந்து பணிவிடை செய்ததன் விளைவாக தெம்பு வந்தது; ஆனால் இத்தெம்பு அவருடைய பாடுகளைக் குறைப்பதற்குப் பதிலாக அவற்றை அதிகரித்தது என்று வந். பீட் கூறுகிறார். இந்த தெம்பு அவருடைய துக்கத்தை தணிப்பதற்கு பதிலாக அதிகப் படுத்தியது. ஆம். சம்மனசானவர், சேசு மனிதர்கள் மேல் கொண்ட அன்பின் காரணமாகவும், பிதாவின் மகிமைக்காகவும் இன்னும் அதிக துன்பப்படும்படியாக அவரைத் தேற்றினார்.

ஆ! என் நேச ஆண்டவரே, இந்த முதல் போராட்டம் எப்பேர்ப்பட்ட துன்பத்தை உமக்கு வருவித்தது! உம்முடைய சரீர பாடுகளின் போது, சாட்டைகளால் அடிக்கப்படுதல், முள்முடி சூட்டப்படுதல், ஆணிகளால் அறையப்படுதல் போன்றவைகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வந்தன. ஆனால், ஜெத்சேமனி தோட்டத்திலோ எல்லா பாடுகளும் ஒரே நேரத்தில் வந்து நசுக்கியதே! இவையனைத்தையும் என் மேல் வைத்த நேசத்திற்காக, எனது நலனுக்காக அல்லவோ ஏற்றுக் கொண்டீர் சுவாமி!

ஓ, என் தேவனே! கடந்த காலத்தில் உம்மை நான் நேசியாமல் போனதற்காகவும், உம்முடைய சித்தத்தை செய்வதற்குப் பதிலாக, எனது சொந்த சபிக்கப்பட்ட சுகங்களையும், இன்பங்களையும் நாடினதற்காக மெய்யாகவே மனஸ்தாபப் படுகிறேன். இவைகளை இப்போது என் முழுமனதோடு வெறுக்கிறேன். என்னை மன்னித்தருளும் சுவாமி.

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும்:

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு,
பாளையங்கோட்டை - 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை, முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்,
லூர்து மாதா தெரு,
தளவாய்புரம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88 B, வெற்றிவேல்புரம் (முருகன் தியேட்டர் அருகில்),
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2586201

**திருச்சி:**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3-வது மெயின் ரோடு
ஸ்ரீனிவாசா நகர், திருச்சி - 620 017.
தொலைபேசி எண்: 0431 -

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்,
சின்னமலை,
சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044 - 22355389.

## MASS CENTRES IN OTHER STATES

**BOMBAY / BANDRA (MH) :**
Pioneer Hall, St. Johh Baptist Road,
After Mount Carmel Church,
Bandra (W).
Tel: 022 - 28079680.

**BOMBAY / MALAD (MH) :**
Gratias Mariae Building,
Tank Road, Next to Orlem Church,
Malad.
Tel: 022 - 28079680.

**BOMBAY / VASAI (MH) :**
St. Gonsalo Garcia Orphanage,
Bassein Fort,
Vasai.

**BANGALORE :**
Mr. Benny Joseph.
Tel: 09448067670.

**GOA :**
Salvador Do Mundo,
Opp: Bus Stand, Benaulim,
Rio Sal Estates,
22, Duplex Apts.
Goa.

**DELHI & DUBAI :**
Contact: Society of St. Pius X,
Palayamkottai,
Tirunelveli – 627 002.


## Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.com